**Source:** *Tamil Murasu*, p2
**Date:** 4 June 2021

## செய்திக்கொத்து

# அதிபர் ஆலோசனை மன்ற உறுப்பினர்கள் பதவி ஏற்பு





டாக்டர் நாயர், திருவாட்டி டான். **ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ் கோப்புப் படங்கள்**

இஸ்தானாவில் நேற்று நடந்த ஒரு நிகழ்ச்சியில் அதிபர் ஆலோசனை மன்ற உறுப்பினர்கள் இரண்டு பேர் பதவி ஏற்றுக்கொண்டனர்.

திருவாட்டி மில்ட்ரட் டான், டாக்டர் சுதா நாயர் ஆகிய அந்த இரண்டு பேரையும் அதிபர் ஹலிமா யாக்கோப் புதன்கிழமை அந்த மன்றத்திற்கு நியமித்தார். திருவாட்டி டானின் பதவிக்காலம் அடுத்த ஆண்டு ஜூன் 1 வரை ஓராண்டுக்கு நீடிக்கும். திருவாட்டி டான் முன்னாள் நியமன நாடாளுமன்ற உறுப்பினர். தொழில்துறைத் தலைவர். பொதுச் சேவை ஆணையத் தலைவரின் ஆலோசனையின் பேரில் திருவாட்டி டானை அதிபர் நியமித்துள்ளார்.

டாக்டர் நாயர் குடும்ப வன்செயல்களுக்குத் தீர்வு காணும் 'பேவ்' என்ற நிலையத்தின் நிர்வாக இயக்குநர். இவர் 2025 வரை நாலாண்டு காலத்திற்கு மாற்று உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ளார்.

தலைமை நீதிபதி, பொதுச் சேவை ஆணையத் தலைவர் ஆகியோரை கலந்து ஆலோசித்த பிறகு பிரதமர் தெரிவித்த யோசனையின் பேரில் இவரை அதிபர் நியமித்து இருக்கிறார்.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.